Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 17-1-1985 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி தை 4) முழக்கம் 176

## புலிகளின் சுவரொட்டிகள் ஆயுதமுனையில் அகற்றப்பட்டன

பொங்கல் தினத்தன்று ஐந்து வீதிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் இயக்கம் நேற்று அதிகாலை குடாநாட்டின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது துப்பாக்கி சகிதம் யாழ் பஸ்நிலையத்துக்கு நேற்றுப்பகல் வந்திருந்த சீருடையினர் அச்சமயம் அங்குநின்ற இளைஞர்களைப் பிடித்து புலிகளின் சுவரொட்டிகளைக் கிழிக்கச் செய்தனர். அதற்கு முதல் பஸ்நிலையப் பகுதியில் நின்றவர்களிடம் ''பஸ்ஸில் வந்து சுவரொட்டிகளை ஒட்டியவர்களைத் தெரியுமா?'' என்றும் அவர்கள் துளைத்துத்துளைத்து விசாரித்தனர். சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் சீருடையினர் நகரைவிட்டுச் சென்றனர்.

★ பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வரவுள்ளது!

# ஸ்ரீமாவோ, பீலிக்ஸ், நிஹால் மூவருக்கும் மீண்டும் குடியுரிமை கேட்டு எதிர்க்கட்சியினர் பிரேரணை!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா, நீதி அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்கிரம ஆகிய மூவருக்கும் மீண்டும் குடியுரிமை வழங்குமாறு கோரும் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்துக்குவரவுள்ளது.

இந்தப் பிரேரணைக்கான முன்னறிவித்தலைக் கொடுப்பதென்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகள் கூட்டாகத் தீர்மானித்துள்ளன

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கம்பஹா எம் பி திரு எஸ். டி. பண்டாரநாயக்காவும் இந்தப் பிரேரணை முன்னறிவித்தலில் கையொப்பம் வைத்து பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பர்

நாடு பல பிரச்சினைகளை எதிர் நோக்கியிருக்கும் இன்றைய காலகட்டத்தில் முக்கிய மானவர்களான இவர்கள் மூவருக்கும் உடனடியாக குடியுரிமை வழங்கவேண்டுமென்று இவர்கள் தமது பிரேரணை முன்னறிவிப்பில் தெரிவிப்பர்

# முள்ளியவளை வீடொன்றினுள் 14 பேர் சுட்டுக்கொலை!

## ராணுவ வீரரும் ஸ்தலத்தில் பலி!

## அடையாளம் காணப்படாது சடலங்கள் ஆஸ்பத்திரியில்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து ஆறு மைல் தூரத்திலுள்ள முள்ளியவளை என்ற இடத்திலுள்ள கந்தசுவாமி கோவிலுக்கு முன்னால் செல்லும் ஒழுங்கை ஒன்றினுள்ளிருக்கும் வீட்டில் இருந்தவர்கள் மீது, இராணுவத்தினர் நேற்று அதிகாலை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்மணியொருவர் உட்பட மொத்தம் பதினான்கு பேர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். இச் சம்பவத்தின்போது ராணுவ கோப்ரலான திலகரத்தின பண்டாவும் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை நான்கு மணிக்கும் ஐந்து மணிக்குமிடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் மரணமானவர்களின் சடலங்கள் தற்போது முல்லைத்தீவு ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. எந்தச் சடலமும் நேற்று மாலை

—4-ம் பக்கம் பார்க்க

## குருநகரில் 19, 20ம் திகதியில் இம்மாத ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளம் எதிர்வரும் 19ம் 20ம் திகதிகளான சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் குருநகர் இலங்கை வங்கி மூலம் வழங்கப்படுமென்று யாழ். கல்விப்

—4-ஆம் பக்கம் பார்க்க

தமிழக சத்துணவு அமைச்சர்

## திருநாவுக்கரசு பதவியை ராஜினாமா செய்வாரா?

(சென்னை)

சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனுடனான தனது லடாயை நேற்று பகிரங்கமாக நிருபர்கள் மத்தியில் வெளிப்படுத்தினார்.

தனக்கு முன்னர் கொடுக்

- 4-ம் பக்கம் பார்க்க

நெடுஞ்செழியன் விளக்கம்;

## எம். ஜி. ஆர். எடுத்த முடிவு; 'திரு' அவசரப்படுகின்றார்!

(சென்னை)

அமைச்சர் திருநாவுக்கரசுவின் இலாகா மாற்றங்களை தெளிவான சிந்தனையோடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரே செய்துள்ளார். இதுபற்றி சந்தேகப்பட்டு ராஜினாமாச்

—4-ஆம் பக்கம் பார்க்க

## 17 தமிழக மீனவருக்கும் எதிரான வழக்கு ரத்தாகி விடுதலை பெறுவர்?

மன்னார் கடலோரத்தில் மூன்று மாதத்துக்குமுன்னர் கைதாகி, அனுராதபுரம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை எதிர்நோக்கியிருக்கும் பதினேழு தமிழக மீனவர்களையும் விடுதலை செய்வது பற்றி இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பான இறுதி முடிவு இன்று அல்லது நாளை அரசாங்கத்தினால் அறிவிக்கப்படலாமென்று அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய ஆசினால் கைப்பற்றப்பட்டு சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைக் கடற்படைவீரர்கள் எழுவரையும், படகையும் திருப்பி ஒப்படைக்குமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலாக, தமிழக மீனவர் பதினேழு பேரையும் விடுதலை செய்யுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ராஷ்கோத்ரா கேட்டிருந்தார்.

''அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லையென்றும் இரண்டையும் ஒன்றுக்க வேண்டாமென்றும்'' வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ். ஹமீத் அறிவித்தபோதிலும், நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

## ரயில் பாதையில் குண்டு வெடிப்பு

(பளை)

பளைக்கும் கொடிகாமத்துக்குமிடையே ரயில் பாதையில் நேற்றுக் குண்டு வெடித்ததால் 45 அடி நீள பாதை சிறிது சேதமுற்றது. ஆயினும் உடைந்த பாதை நேற்று மாலையே திருத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## சங்குப்பிட்டி - மன்னார் பஸ் சேவை ரத்து; காணாமல்போன பஸ் யாழ். திரும்பியது!

யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு சங்குப்பிட்டிக்கு ஊடாக மன்னாருக்கு நடத்தப்பட்டுவந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தினசரி பஸ்சேவைகள் நேற்று முதல் ரத்துச்செய்யப்பட்டன.

குடாநாட்டுப் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரிலேயே இச் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. நேற்று முன்தினம் இப்பாதையில் கண்ணி வெடி வெடித்ததே இதற்குக் காரணமென்று தெரியவந்துள்ளது.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கான பஸ் சேவைகள் தற்போது வவுனியா வரை மட்டுமே நடத்தப்படுகின்றன மன்னார்பிரயாணிகள் வவுனியாவில இறங்கி வவுனியா டிப்போ பஸ் மூலம் மன்னார் செல்லவேண்டும்.

இந்த வேளையில் கடந்த 24 மணித்தியாலங்களாக காணாமல் போனதாகக் கருதித் தேடப்பட்டுவந்த சங்குப்பிட்டி மன்னார்ப் பாதை பஸ் நேற்று மாலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

சங்குபபிட்டிமன்னார் பாதையில் பாதுகாப்புப்படையினர் இந்த பஸ்ஸை மன்னார்செல்ல விடாதுபயணிகளுடன் திருப்பி விட்டதால் பஸ் கிளிநொச்சி சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## குண்டு வெடித்த ஒரு பாதை சீரானது!

பொங்கல் தினத்தன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட ஐந்து வீதிகளில் ஒன்றான நெல்லியடியிலிருந்து கொடிகாமத்துக்கு வரணியூடாகச் செல்லும் முள்ளிப்பாலம் நேற்று இளைஞர்களினால் செப்பனிடப்பட்டது. ட்ராக்டர்களில் நாற்பது தடவைக்கு மேல் கொண்டு வரப்பட்ட மண்ணால்மூடப்பட்டு இடிபாடுகள் நிரப்பப்பட்டுள்ளன. இப்பாதையால் இப்போது போக்குவரத்துச் செய்யக் கூடியதாக இருக்கின்றது.

## எமது நாட்டுப் பிரச்சினைக்கு பாரதம் தீர்வு காண்பதா?

(கொழும்பு)

இலங்கையைத் துண்டாட நினைப்பவர்கள் சர்வகட்சி மாநாட்டு யோசனைகளை நிராகரித்து விட்டனர் என்று ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றுத் தெரிவித்தார்.

''இலங்கையில் இனிப்பேச ஒன்றுமில்லை என்று திரு அமிர்தலிங்கம் சொன்னது சரியானது'' என்று சொன்ன அமைச்சர் கூட்டணியினர் இப்போது பிறநாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நட

—4-ஆம் பக்கம் பார்க்க

## வண. பஸ்தியன் உருவச் சிலை

(மன்னார்)

மன்னார்—வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்

—4ம் பக்கம் பார்க்க

# பெருந்தெருக்கள் திணைக்கள 100 ஊழியர் வேலை நீக்கம்

(சுண்டுக்குளி)

வேலணை பெருந் தெருக்கள் திணைக்களத்தைச் சேர்ந்த சுபார் நூறு ஊழியர்களின் வேலை பறிபோயுள்ளது. இவ் ஊழியர்கள் இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் திடீர் வேலை நீக்க உத்தரவு பிரஸ்தாப நூறு ஊழியர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

நீண்ட காலமாகப் பெருந் தெருக்கள் திணைக்களத்தில் கடமையாற்றி வந்த ஊழியர்களே இவ் வேலை நீக்கத்திற்கு ஆளாகியுள்ளனர், என்றும், தமது வேலை நீக்கத்தை ஆட்சேபித்து நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும் வேலை இழந்த ஊழியர்கள் தெரிவித்தனர். வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கத் திணைக்களம் முன்வந்துள்ளபோதிலும் இந் நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும், தமக்கு மீண்டும் வேலைகளை வழங்குமாறு கோரியும் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

# சினிமாப்படச் சுருள்களும் கடுமையாகப் பரிசோதனை

(மன்னார்)

ரயில் மார்க்கமாக அனுப்பப்படும் சினிமாப் படச் சுருள்கள் அடங்கிய பெட்டிகள் யாவும் ரயில் நிலைய அதிபரினால் சோதனையிட்ட பின் ரயில் நிலைய அதிபர் முன்னிலையில் சீல வைக்கப்பட்ட பின்பே ரயில் நிலையத்தில் பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு கூறும் சுற்று நிருபம் ஒன்றை ரயில்வே திணைக்களம் சகல ரயில் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இச்சுற்று நிருபத்தில் ரயில் மார்க்கமாக அனுப்பப்படும் பார்சல்களை ரயில் நிலையத்தில் பொறுப்பேற்கு முன் அப்பார்சலை ரயில் நிலைய அதிபர் பரிசோதனை செய்ய வேண்டும்.

இத்துடன் பார்சல் அனுப்ப வருபவரின் அடையாள அட்டை இலக்கத்தை பதிவில் வைத்துக் கொள்ள வேண்டும். என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

31ம் திகதி

## திருமலை, பட்டிருப்பு நியமனம்

காலியாகவுள்ள திருக்கோணமலை, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளுக்கான நியமனங்கள் இம் மாதம் 31 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை தொகுதிக்கான நியமனப் பத்திரம் திருமலை கச்சேரியிலும், பட்டிருப்புத் தொகுதிக்கான நியமனப்பத்திரம் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தையும் அன்றைய தினமே காலை 11 மணிக்கு முன்னர் செலுத்த வேண்டும்.

திருகோணமலை தொகுதியில் 53,940 பேரும், பட்டிருப்பில் 49,710 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

## சிறுவர்க்குப் பரிசு

(நவாலி)

நவாலி வை. எம். சி. ஏ. யினர் சென்ற வாரம் நடாத்திய சிறுவர் தின விழாவில் இங்கு இலவசமாக கல்வி பயிலும் மாணவ மாணவியர்க்கு பல்வேறு பாடங்களிலுமுள்ள பாடப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்ததுடன் பலவயையான பொருட்களையும் பரிசாக வழங்கினர்

## மீண்டும் ரயில் சேவை

(மன்னார்)

அனுராதபுரம் - தலைமன்னார் ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

கடந்த டிசம்பர் 29 முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்ட இந்த ரயில் சேவை இம்மாதம் 9ம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## இடமாற்றம்

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் பௌதிகவியல் ஆசிரியர் திரு. ந சௌந்தரராஜா இம்மாதம் முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

# கந்தபுராணச் சிந்தனை மக்களிடம் பதிய வேண்டும்

(புங்குடுதீவு)

''இன்றைய நிலையில் தர்மம் தழைக்க, கொடுவினைகள் அழியச் சைவாலயங்கள் தோறும் கந்தபுராண படனம் நடைபெறவேண்டும். நாவலர் பெருமான் காட்டிய வழியில் கந்த புராணச் சிந்தனைகளை மக்கள் மனதில் பதிக்க வேண்டும் யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் எனப் பெருமையாக ஒரு காலத்தில் பேசப்பட்டது. அந்நிலை இன்றில்லை. மீண்டும் அந்நிலை உருவாக நாமனைவரும் முயற்சிக்க வேண்டும்.''

இவ்வாறு சைவப்பேரறிஞர், வித்துவான் பொன். அ கனகசபை புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோவிலில் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்ற கந்த புராணசபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கந்தபுராண படனத்தின் மூலம் மக்கள் தூய நெறியைப் பின்பற்றி வாழ வழிகாட்ட முடியும் என்றார்.

சைவப்பிரசாரகர் திரு. ம. நமசிவாய தேசிகர் பேசுகையில், சைவாலயங்கள் தோறும் கந்த புராணமும், திருமுறைகளும் ஒலிக்க வேண்டியது அவசியமென்றார்.

திரு. தி சதாசிவம் உட்பட மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர். ஈற்றில் சபையின் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது

## காரைநகரில் முக்கிய களவு

(சுழிபுரம்)

பொன்னாலையில் காரைநகர் கடற்படையினர் நீர் எடுக்கும் கிணற்றின் நீர் தாங்கியில் பொருத்தப்பட்டிருந்த சக்திமிக்க நீர்ப்பம்பியை இனந் தெரியாத சிலர் எடுத்துச் சென்று விட்டார்களாம்.

கடந்த சிலகாலமாக இக் கிணற்றை அவர்கள் பாவனையிலிருந்து நிறுத்தி வைத்திருந்தார்கள் என்பதும் இதனால் அங்கு ஒரு காவலாளியை நியமித்திருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மின்பாவனை

கைதடி நுணாவில், கைதடி மேற்குப் பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பாவிப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இச்செயலால் சாதாரண மின் பாவனையாளர் அநேக கஷ்டங்களுக்குள்ளாகி வருகின்றனர். சட்டவிரோதமாக மின்சாரம் பாவிக்கப்படும்போது, தொலைக் காட்சிப்பெட்டிகள், வானொலிப்பெட்டிகள் என்பன பழுதடைகின்றன மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டு கிராமம் இருளில் மூழ்கி மக்கள் அவலப் படவேண்டி நேரிடுகின்றதாம்.




✱ காரைநகர், முத்துலிங்கம் பிரேமாவதி தம்பதிகளின் மகள் சங்கீதா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கரவெட்டி, வதிரி சிவபாதராஜா சிவதேவி தம்பதிகளின் மகன் ராஜீவ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ். கே. கே. எஸ். வீதி, ஆதித்தன் கங்கா தம்பதிகளின் மகள் கோபிகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கொட்டடி, நரேந்திரன் சிவாணி தம்பதிகளின் மகன் சஞ்சிவன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✱ பூநகரி, விஞசித்தம்பி நாகபூஷணி தம்பதிகளின் மகள் மஞ்சுளா இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ நாச்சிமார் கோவிலடி, சந்திரசேகரம் கமலா தம்பதிகளின் மகன் பிரசாத் இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✱ அரியாலை, இராஜேஸ்வரி வீதி, புஷ்பராஜா-வரதலஷ்மி தம்பதிகளின் மகள் மெந்தா இன்று தனது ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கொழும்புத்துறை பிரதான வீதி, சுந்தரம்பிள்ளை தனபாக்கியம் தம்பதிகளின் செல்வப் புதல்வி உதயா (ஷீலா) தனது பன்னிரண்டாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார்.

✱ அரியாலை மலர்மகள் வீதி, சிவகுருநாதன் அன்னலட்சுமி தம்பதிகளின் மகன் பபிகரன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ அரியாலை, புஷ்பராஜா வரதலட்சுமி தம்பதிகளின் மகள் மஜீதா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ இத்தாவில், மயில்வாகனம் தவமணி தம்பதிகளின் புதல்வன் ஜெயந்தன் இன்று தன் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## சைவப்புலவர் பரீட்சை

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும் சைவப்புலவர் பரீட்சைகள் ஏப்ரல் 5 முதல் 7வரை நடைபெறும். விண்ணப்ப இறுதி நாள் இம்மாதம் 31ம் திகதி. விண்ணப்பபடிவம், பாடவிதானம் தேவையானோர் சைவப் புலவர் சங்கம், 125 அரசடி வீதி யாழ்ப்பாணம் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

# பாடசாலையில் மதப் பூசல்; ஒருபகுதியினர் பாதிப்பு

(நவாலி)

பாடசாலையில் தங்கியிருந்த அதிபரின் அறைக்குள் நுழைந்த முகமுடி நபர்கள் இருவர் அதிபரைத் தகாத வார்த்தைகளால் ஏசி அவரது மூக்குக் கண்ணாடியையும் நொருக்கினர். அறையிலிருந்த சரஸ்வதி படத்தையும் அடித்துடைத்த இவர்கள் இச் சம்பவம் பற்றி வெளியே சொல்லக் கூடாதென அதிபரை எச்சரித்து விட்டுச் சென்றனராம்.

நவாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் சென்ற வாரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு அங்கு இடம்பெற்றுள்ள மதப் பூசலே பின்னணியாகலாம் எனப்படுகிறது.

சென்ற வருடம் நவராத்திரி விழா கொண்டாட ஒழுங்கள் மேற்கொள்ளப்பட்டபோது கல்லூரியின் சில கிறிஸ்தவ ஆசிரியைகளின் எதிர்ப்பு கிளப்பி பின் பெற்றோரது சமரச முயற்சியால் விழா இனிது நடைபெற்றது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய சம்பவத்தையடுத்து இங்கு கல்வி பயிலும் நூற்றுக்கு மேற்பட்ட இந்து மாணவர்கள் இரு நாட்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். அத்துடன் இந்துப் பெற்றோர் சம்பவத்துக்கு காரணமானவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் படியும், இந்து மதத்தைப் புறக்கணிக்காது அதற்கும் சமவாய்ப்பை அளிக்க ஆவன செய்யுமாறும் கோரும் மகஜர்களை வட்டாரக் கல்வியதிகாரி, வடமாநலக் கல்விப் பணிப்பாளர், யாழ். ஆயர் என்போருக்கு அனுபபி வைத்துள்ளனர்


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

125 இரு. வெண்கல கோவில் மணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. இரத்தின சிங்கம், 3, சந்தனமாதா கோவில் லேன், பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

சைக்கிள் பாவனை அனுமதிவிண்ணப்ப படிவங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (புதியன Latest)
ஏல விற்பனை நிலையம்
கோப்பாய்

மைக்கிரஸ் கோப் (இந்தியா) மைக்கிரஸ் கோப் (U K.) விற்பனைக்குண்டு.
விபரம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

ENGLISH BY POST
வீட்டில் இருந்தபடியே விரைவாகவும் இலகுவாகவும்
ஆங்கிலம் படிக்கவேண்டுமா?
தொடர்பு கொள்ளுங்கள்:
மல்ரி சேவிசஸ்
37 (351). மணிக்கூட்டு வீதி.
(வெலிங்டன் தியேட்டர் சந்தி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22762

மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!
15-12-84 முதல்
30-01-85 வரை
36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437
உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு



### உதய சிந்தனை

சுயராஜ்யப் போராட்டம் என்பது வெறும் அரசியல் துறையில் மட்டும் விழிப்பு ஏற்படுவதல்ல. சமூகம், கல்வி, ஒழுக்கம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளிலும் விழிப்பு ஏற்படுத்தும் போராட்டத்தையே அது குறிப்பதாகும். -மகாத்மாகாந்தி.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

17-1-85 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி தை 4)

# அரசியல் தீர்வு காண இரு புதிய முகாம்கள்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடும், அங்கு ஒரு தலைப்பட்சமாக எடுக்கப்பட்ட முடிவுகளும் பழங்கதையாகிவிட்டன.

மாநாட்டு முடிவுகள் அமுல்படுத்தப்படமாட்டா என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டே ஒரு மாதமாகப் போகின்றது.

அப்படியானால் அடுத்த திட்டம் என்ன? அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

அரசாங்கத்தைப் பார்த்துப் பொதுமக்கள் கேட்கும் கேள்வி இது.

பிரச்சினைகளுக்குச் சுமுகமான முடிவு காணவேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா?

அரசாங்கத்தைக் கேட்பதற்கு பாராளுமன்ற எதிர்க்கட்சி வரிசையில் தமிழ் எம். பீக்கள் இடையாது.

அரசாங்க சார்பு தமிழ் எம். பீக்கள் நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நடந்து முடிந்தபின் சிலவேளை மௌனம் கலையலாம்.

வெளிநாடுகள் இனிமேல் இப்பிரச்சினையில் எவ்வளவு தூரத்துக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகின்றன என்பது எவராலுமே நிச்சயமாகக் கூறமுடியாத ஒன்றாகும்.

இந்த நிலையில் நாட்டின் தலைவர் தெரிவித்திருக்கும் இரண்டு கருத்துக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வில் பெரும் ஐயத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

''அரசாங்கத்துள் பலரும், அமைச்சரவைக்குள் பலரும் எதிர்த்த போதிலும், சர்வகட்சி மாநாட்டு முடிவுகள் மூலம் தமிழருக்குச் சில 'சலுகை'கள் வழங்கவிருந்தேன். இப்போது அதனையும் வாபஸ் பெற்று விட்டேன்'' என்ற அவரது முதலாவது கருத்து, இப்பிரச்சினையைத் தீர்க்க இனி வழியே கிடைக்காதோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழர் கேட்பது தங்கள் ''உரிமை''யா? அல்லது சிறு ''சலுகை''யையா? என்ற சந்தேகத்தையும் இந்தக் கூற்று ஏற்படுத்தியிருக்கின்றது என்பது வேறு விஷயம்.

அடுத்தது, தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடாதவரை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் இனிமேல் தாம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தம், சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்த்துச் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்பதாகும்.

1983 ஜூலை மாத கலவரத்தையடுத்து, அதே மாத இறுதியில், கூட்டணி எம். பீக்கள் பாராளுமன்றத்தில் இல்லாத நேரத்தில், அவசர அவசரமாக இத்திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இத்திருத்தத்தை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்யாததால் கூட்டணி எம். பீக்கள் தங்கள் பதவிகளை இழந்தது அனைவருக்குமே தெரிந்த சமாச்சாரம்.

இதனை நன்கு தெரிந்து கொண்டு தான் இது வரை கூட்டணியினருடன் அரசாங்கத் தலைவர்கள் மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர்களும் பேசி வந்துள்ளனர். அதுமட்டுமல்ல! வெளிநாட்டுத் தலைவர்கள் கூட கூட்டணியினருடனேயே இப்போதும் பேசிவருகின்றனர்.

நிலைமை இப்படியிருக்கையில், கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடாத வரையில் அவர்களுடன் பேச்சுக் கிடையாது என்ற புது அறிவிப்பு. தீர்வைத்தட்டிக் கழிக்க எடுக்கப்பட்ட ஒரு முடிவாகவே தெரிகின்றது.

கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று சொல்லும் அதே வேளையில், மேலும் இரு இராணுவ முகாம்களை வடக்கே அமைத்திருப்பது, அச்சத்தை மேலும் கூட்டுவதாயுள்ளது.

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண'' புதிய இரு முகாம்களும் உதவலாம் என்பது ''அரசாங்கத்தின் சித்தாந்தமாகவும்'' இருக்கலாம்!

## பாகிஸ்தானுக்கான அமெரிக்க

# ஆயுத உதவி பாரத உறவில் விரிசல் தந்தது உண்மையே

## குடியரசு செனட்டர் பெரஸ்லாஸ் ஒப்புக்கொண்டார்

(காத்மண்டு)

''பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகள் அளித்து வருவது பாரத-அமெரிக்க உறவு நிலையில் முட்டுக்கட்டை உருவாக ஏதுவானது என்பது உண்மையே'' என்று அமெரிக்கக் குடியரசுக் கட்சிச் செனட்டரான திரு. பெரஸ்லாஸ் நேற்று இங்கு கருத்து வெளியிட்டார். அமெரிக்கா பாரதத்துடனும், பாகிஸ்தானுடனும் நட்புறவினை மேன் மேலும் வளர்த்து வலுப்படுத்தவே விரும்புகிறது.'' என்று சொன்ன அவர் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மேற்கொள்ளவுள்ள அமெரிக்க விஜயத்தை பெரிதும் வரவேற்றார். பாரதப் பிரதமரின் அமெரிக்க வருகை ஆக்கபூர்வமான செயல் என்று அவர் வர்ணித்தார்.

இது இவ்வாறு இருக்க, பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தான் பிரதமராகப் பதவியேற்றதும், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அதிகரித்த அளவில் அதிநவீன ஆயுதங்கள் அளித்து வருவது பாரத துணைக்கண்டத்தின் அமைதிக்கே இடையூறானது, இந்நிலை கவலைக்குரியது என்று ஆணித்தரமாகத் தன் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகனின் விஷேட தூதுவர் ஒருவர் பாரதப் பிரதமரைச் சந்தித்து கடந்த வாரம் உரையாடியிருந்ததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### அச்சம்

(லண்டன்)

பிரேஸிலில்நடைபெற்ற மண் சரிவினால் ஐம்பது பேர் மாண்டனர் என அஞ்சப் படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

## ஏப்ரல் 6ல் பங்களாதேஷ் பொதுத் தேர்தல் நிகழும்

(டாக்கா)

பங்களாதேஷ் அமைச்சரவை ஜனாதிபதி எர்ஷாத்தினால் கலைக்கப்பட்டுள்ளது. பொதுத்தேர்தல் ஏப்ரல்மாதம் ஆறாம் திகதி நடைபெறும் என்று பங்களாதேஷின் தலைமைத் தேர்தல் கமிஷனர் நேற்று அறிவித்தார்.

பங்களாதேஷில் நியாயமாகவும், சுயேச்சையாகவும் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி முன்னதாக அறிவித்திருந்தார்.

பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசினால் அறிவிக்கப்பட்டது இது இரண்டாவது தடவையாகும்.

ஆயினும் பங்களாதேஷின் எதிர்கட்சிகள் பொதுத் தேர்தலை ஏற்குமா இல்லையா என்பது பற்றிய தகவல் இது வரை தெரிவிக்கப்படவில்லை

### அமைச்சர் வீரப்பன் விருப்பம்

(சென்னை)

''எழுத்துச் சீர்திருத்தம் தமிழ் மொழி வளர்ச்சிக்கான தேவையாகும். என்று தமிழக அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் நேற்று சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் பேசுகையில் கூறினார்.

''பத்திரிகைகள் இந் நிலையை உருவாக்கவேண்டும்'' என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

### 475 உறுப்பினர் பதவிஏற்றனர்

(புதுடில்லி)

எட்டாவது லோக்சபையின் முதலாவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமான போது 475 உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

### தீர்மானம்

(புதுடில்லி)

பாரதமும், இத்தாலியும் எரிசக்தித்துறையில் புதிய அணுகுமுறையைப் பின்பற்றிச் செயலாக்கம் பெறுவதெனத் தீர்மானித்துள்ளன.

## திருக்குறள், அண்ணா பற்றிய ஆராய்ச்சி நூல்களுக்கு ரூ.10ஆயிரம் பரிசுகிடைக்கும்

(சென்னை)

திருக்குறள் பற்றியும், பேரறிஞர் அண்ணாதுரை பற்றியும் எழுதப்படும் ஆராய்ச்சி நூல்களுக்கு வருடந்தோறும் பத்தாயிரம் ரூபா பரிசளிப்பதென தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்று சென்னையில்நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

கம்பர் விழா, இளங்கோ அடிகள் விழாக்களையும் மாநில அரசின் செலவிலேயே நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

முதுமை நிலையடைந்த தமிழறிஞர்களுக்கும் இவ் விழாவில்வைத்து நிதியமைச்சர் அவர்களுக்கான நிதியுதவிகளை வழங்கினார்.

பத்தொன்பது பேருக்கு இவ் விழாவில் வைத்து அவர்கள் எழுதிய நூல்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. இலங்கையைப் பற்றி திரு. குரும்பூர் குப்புசாமி எழுதிய, ''குட்டித் தீவை எட்டிப் பார்த்தேன்'' என்ற பயண நூலுக்கும் ஓர் பரிசு இவற்றுள் கிடைத்தது. இவ்விழாவில் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், சபாநாயகர் திரு. கே. ராஜராம், திருக்குறள் முனுசாமி முதலானோரும் கலந்து கொண்டனர்.

## இலங்கை கப்பல் விவகாரம்: லோக சபையில் எதிரணி வினா தொடுக்க முனைவு

(புதுடில்லி)

புதிய எட்டாவது லோக சபையின் தற்போதையக் கூட்டத் தொடரில் எதிர்க் கட்சிகள் ஒருங்கிணைந்து, இலங்கையின் கடற்படை வீரர்கள் பாரத கடலாதிக்க எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்ததான விவகாரம் குறித்து கேள்வி எழுப்புவதென தீர்மானித்துள்ளன.

ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. மது தண்டவதே தலைமையில் இக் கூட்டிணைவு தொடர்பான கூட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டிணைவில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் (எஸ்), மாஜிப் பிரதமர் திரு. சரண்சிங் தலைமையிலான லலித் மசூர் கிஷான் கட்சி முதலானவையும் இடம் பெறுகின்றன.

போபாலில் நடைபெற்ற விஷவாயுக் கசிவு சம்பவம் தொடர்பாகவும் இக்கூட்டணி லோக சபையில் கேள்வி எழுப்பவுள்ளது.

### ஆளுநர் ஏற்றார்

(சென்னை)

தமிழக மாஜி மந்திரிகளான திருவாளர்கள் குழந்தைவேலு, விஜயசாரதி ஆகியோரின் ராஜினாமாக்களைத் தமிழக ஆளுநர் திரு. எஸ் எல் குரானா ஏற்றுக் கொண்டுள்ளார்.

## உலக சமாதான உறுதிப்பாடு

# பாரதத்தின் உதவி நாடி ரஷ்ய மந்திரி கோரிக்கை

(மாஸ்கோ)

மண்டல சார்பற்ற நாடுகள் இயக்க ஒத்துழைப்புடன் அமைதி விரும்பும் நாடுகளையும் ஆதரித்து உலக சமாதான நன்நிலை காண பாரதத்தின் உதவி தேவையென சோவியத் யூனியன் கேட்டுக்கொண்டுள்ளது.

சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ சோவியத் யூனியனுக்கான பாரத தூதுவரை நேற்றுச் சந்தித்த போது தமது இவ் வேண்டுகோளை விடுத்தார் என்று மாஸ்கோ தகவல் தெரிவித்தது.

சோவியத் யூனியனும் பாரதமும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதுடன் பரஸ்பர புரிந்துணர்வினையும் உறுதிப் படுத்திக் கொள்வதென்றும் இச் சந்திப்பின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# ஈழமுரசு


## படுகொலைகளை தடுத்து நிறுத்த ராஜீவுக்கு ஜனார்த்தனன் தந்தி!

(சென்னை)

''பாரதத்திற்கு விஜயம் செய்வதாக உள்ள இலங்கையின் மூத்த அமைச்சருடன் இலங்கைக் கடற்படைக் கப்பல் அத்துமீறி பாரத கடலாதிக்க எல்லைக்குள் பிரவேசித்தது குறித்தும் பேசுங்கள்'' என்று உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் நேற்றுப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியில் கேட்டுக்கொண்டுள்ளார். ''எண்ணிக்கையில்லாமல் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்'' என்றும் அவர் பிரதமரைக் கோரியுள்ளார்.

### கடல் சட்டம் என்ன சொல்கிறது?

# இந்திய கடல் எல்லை 20 கிலோ மீட்டர்

# அத்துமீறலை சட்டப்படி தண்டிக்கலாம்

(சென்னை)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பிடிபட்ட கடற்படையினர் சம்பந்தமாக இழுபறியில் இருக்கும் பிரச்சினை இப்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

இவ்விவகாரத்தில் இந்தியக் கடற் சட்டம் என்ன சொல்கிறது என்ற கேள்வி எழுகிறது. இம்மாதம் 12ம் திகதிய 'இந்து' பத்திரிகையில் திரு. ஜி. கே. ரெட்டி எழுதிய செய்திக் கட்டுரையில இரண்டு பந்திகள் மொழிபெயர்க்கப்பட்டு கீழே தரப்படுகின்றது:-

1976ஆம் ஆண்டின் கடல் சார் சட்டமானது 1977, ஜனவரி 14ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் இந்தியாவின் தனிப்பட்ட பொருளாதார வலயத்தினை இரு நூற்று இருபது கிலோ மீட்டர்வரை நீடிக்கவைத்திருந்தது. ஆயினும் அதன் கடற் பிராந்தியத்தை இருபது கிலோமீட்டரிலும் பார்க்கச் சற்றுக் குறைவாக அது மட்டுப்படுத்திற்று.

அனுமதியின்றி இப்பிராந்தியக் கடல் எல்லைக்குள் பிற நாடுகளினுடைய வள்ளம், படகு, கப்பல் போன்ற நீர்க்கலங்கள் புகுந்தால், இச்சட்டத்தின்கீழ் அது ஒரு குற்றத் தவறாகும். பிறநாட்டுப்போர்க் கப்பல்கள், தமது போக்குவரவுகளைப்பற்றிய தகவலை முன்னரே அளித்ததன் பின்பு, இப்பிராந்தியக் கடல்நீர் வழியாகக் கள்ளங்கபடமில்லாத, தீங்கு செய்யும் நோக்கம் அற்ற, போக்குவரத்துச் செய்யும் உரிமையைச் சம்பிரதாயபூர்வமாக அனுபவித்துவருகின்றன.

தற்போதைய நிலையில், இலங்கைக் கடற்படைச் சுற்றுக் காவற் படகுகள் இந்தியக் கடற் பிராந்திய நீர் எல்லைக்குள் மீண்டும் மீண்டும் பிரவேசித்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்து வந்துள்ளன. இதன் காரணமாக இச்சட்டமுரணான இலங்கையின் செயல்களானவை, இந்தியச் சட்டங்களை மாத்திரமல்லாது இந்தியாவின் கடற்கரைக்கு அப்பாற்பட்ட சட்ட திருவாகத்தையும் பாரதூரமாக மீறுவனவாக அமைகின்றன.

எத்தனையோ இந்தியமீன்பிடி வள்ளங்கள் நீரினுள் அமிழ்த்தப்பட்டுள்ளன இலங்கையின் கடற்படைப் படகுகளினால் இந்தியமீனவர் அனேகர்கொல்லப்பட்டிருந்தனர் அல்லது காயப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் கடற்படையினர் எழுவர்மீதும் சட்டநடவடிக்கை எடுக்க அதிகாரமுண்டு.

## முள்ளியவளை...

—1ம் பக்கத் தொடர்

வரை அடையாளம் காணப்படவில்லை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் ஒன்றாகவிருந்து வீடியோ படம் பார்த்துக் கொண்டிருந்த வீட்டிலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் மரணமானவர்களில் ஒருவர் வயோதிபர் என்றும், அவரது சடலமும் ஆஸ்பத்திரியிலேயே இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. ே. ஞானச்சந்திரன் நேற்று மாலை ஆஸ்பத்திரிக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்டார். முள்ளியவளையிலிருந்து பொலிஸாரால் கொண்டுவரப்பட்ட சடலங்கள் இன்று பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்படும்.

இச்சம்பவத்தையடுத்து முள்ளியவளைப் பகுதியில் மயான அமைதி நிலவியது. பொது மக்கள் எவரும் வீதிகளில் காணப்படவில்லை.

மரணமான ராணுவ கோப்ரலின் சடலம் நேற்று மதியமே ஹெலிகப்டரில் கொழும்பு கொண்டு செல்லப்பட்டது. இச்சம்பவம் பற்றி ராஜாங்க அமைச்சு விடுத்த அறிக்கையில், இரண்டு பெண்கள் உட்பட பதினைந்து பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


**O/L 85 December**

9ம் வகுப்பு, 8ம் வகுப்புக்கள் 18-1-85 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்ற டிசம்பர் 84 O/L பிரிவிற்கான விசேஷ மீட்டல் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

**HOPE WELL INSTITUTES**

யாழ்ப்பாணம்.


## மூடத்தனம் பற்றி ஜெனி

(கண்டி)

''இனப்பிரச்சினை எமது உள்நாட்டுப் பிரச்சினை இதில் மற்றைய நாடுகளைத் தலையிடுமாறு கேட்பது மூடத்தனம்'' என்று நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

''சகல கருத்து வேறுபாடுகளையும் மறந்து ஒன்றுபட்டாலே பயங்கரவாதத்தை இல்லாமல் செய்ய முடியும். பயங்கரவாதத்தை நீக்காவிட்டால் சகல அரசியல் கட்சிகளுமே பாதிக்கப்படும்'' என்றும அவர் சொன்னார்.

## எம். ஜி. ஆர்...

—1-ஆம் பக்கத் தொடர்

செய்ய வேண்டிய அவசியம் எதுவுமில்லை. அமைச்சர் திருநாவுக்கரசு அவசரப்பட்டு விட்டாரென நிதியமைச்சர் நெடுஞ்செழியன் கூறினார்.

அமைச்சர் திருநாவுக்கரசுவின் ராஜினாமா தொடர்பாக இக்கருத்துக்களைத் தெரிவித்த நெடுஞ்செழியன் அமைச்சருக்கே தான் இவற்றை விரிவாக விளக்கி விரைவில் நாடு திரும்பவுள்ள முதலமைச்சரிடமே பிரச்சினையைப் பேசி முடிக்கும்வரை பொறுமையாயிருக்கும்படி கேட்டுக் கொண்டும் அவர் அவசரப்பட்டு செயற்படுவது வருந்தத்தக்கது எனக் கூறினார்.

அமைச்சரவை இலாகாக்களை மாற்ற தனக்குள்ள முழு அதிகாரத்தை முதலமைச்சர் பயன்படுத்தி உள்ளாரென்றும் இவ்வாறு ஏன் செய்தாரென விளக்கத் தேவையில்லை என்பதால் இதற்கான காரணங்களை அவரிடமே கேட்கவேண்டுமென்றும் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் நெடுஞ்செழியன் கூறினார்.

## கிளைச் சங்கங்கள் ஊடாக பங்கீட்டு அட்டை வழங்கல்

பாவனையாளர்கள் தமது உணவுப்பங்கீட்டு அட்டையை இதுவரை பெற்றிராவிட்டால், உடனடியாக அண்மையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு த. மார்க்கண்டு அறிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிளைச் சங்கங்களுக்கு விநியோகிக்கவென புதிய அட்டைகள் தமது அலுவலகத்தால் சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடத்தப்பட்ட வான் நிற்கிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான வான் நேற்று அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்தது. முல்லைத்தீவு பரந்தன் வீதியில் ஆறு மைல் தூரத்திலுள்ள முள்ளிவாய்க்கால் என்ற இடத்தில் வான் நிற்கக் காணப்பட்டது. முல்லைத்தீவு பொலிஸார் வானை மீட்டுச் சென்றனர். இந்த வான் முல்லைத்தீவு அகதிகளுக்கு உணவுப் பொருட்களை எடுத்து வரும்போது கடத்திச் செல்லப்பட்டது.

## எமது நாட்டு...

—1-ம் பக்கத் தொடர்

த்துகின்றனர். துபற்றி இந்தியாவிடம் தாம் கவலை தெரிவிப்போம். சிநேகபூர்வமற்ற இச்செயலைஇட்டு நாம் மகிழ்வடைய முடியாதெனவும் சொன்னார்''இந்திய அரசு தான்இனித் தீர்வு காணவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியான ஒரு சூழ்நிலை ஏற்படாது'' என்றும அமைச்சர் அல்விஸ் குறிப்பிட்டார்.

அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்து செய்தியாளர்கள் மத்தியில் அமைச்சர் பேசுகையில் சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் இலங்கையின் சிறுபான்மை மக்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த திட்டமாகும்என்றும் குறிப்பிட்டார்.

## வண. பஸ்தியன்...

—1ம பக்கத் தொடர்

தின்போது கொல்லப்பட்ட வங்காலை பங்குத்தந்தை அருட் திரு மேரி பஸ்தியனுக்கு மிகப் பெரிய அளவிலான உருவச் சிலை அமைக்கப்படவுள்ளது.

இவ்வுருவச் சிலை வங்காலை புனித அன்னம்மாள் ஆலய முன்றலில் அமைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை வங்காலை பங்கு மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீக்கிய மதகுரு சுடப்பட்டார்

அமிர்தசரஸ் பொற்கோவிலின் பிரதம சீக்கிய மதகுருக்களில் ஒருவரான திரு. கிருபால் சிங் நேற்று மூன்று இளைஞர்களினால் சுடப்பட்டார். பஞ்சாப் மாநிலத்தின் கிராமமொன்றில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தில் இவரோடுசென்ற மற்றிருவரும் காயமடைந்தனர், உடனடியாக ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்ட கிருபால் சிங்கின் உடலில் சுமார் ஆறு குண்டுகள் இருந்தன.

## திருநாவுக்கரசு...

—1-ம் பக்கத் தொடர்

கப்பட்டிருந்த இரண்டு;மூன்று இலாகா பொறுப்புகள் நிதியமைச்சரால் பறிக்கப்பட்டது, தனக்கு அதிர்ச்சி தருவதாகக் கூறிய அவர், தான் தனது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாகச் சொன்னார்.

நியூயோர்க்கிற்கு நேரில் சென்று முதல்வர் எம். ஜி. ஆரிடம் நேரடியாக ராஜினாமாக் கடிதத்தை ஒப்படைக்கப் போவதாகவும், அப்படிச் செல்லமுடியாவிட்டாலும் கடிதத்தை அவருக்கு அனுப்பப்போவதாகவும் எதற்கும் திரு. எம். ஜி ஆரின் ஆலோசனைப்படியே தான் செயற்படப் போவதாகவும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## மேலும் இருவர் நியமனம

தற்போதைய நாட்டின் பந்தோபஸ்து நிலையாலும், வெடிமருந்துகள் பெருமளவு பாவிக்கப்படுவதாலும் ஜனாதிபதி நேற்று இரண்டு புதிய சிரேஷ்ட வெடிமருந்துக் கட்டுப்பாட்டாளர்களை நியமித்துள்ளார் ஏற்கனவே பத்து உதவி வெடிமருந்துக் கட்டுப்பாட்டாளர்கள் உள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் பல்ராம் சபாநாயகர்

(புதுடில்லி)

எட்டாவது லோகசபையின் முதலாவது சபாநாயகராக திரு பல்ராம்ஜாக்கர் நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். ஏழாவது லோகசபையின் சபாநாயகராகவும் பணியாற்றிய இவரது பெயரை பிரதமர் ராஜீவ் காந்தி முன்மொழிய, பாராளுமன்ற விவகார அமைச்சர் எச். கே. எல். பகத் வழிமொழிந்தார்.

## ஆசிரிய சம்பளம் அமைச்சரவை அங்கீகாரம்

ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுதல் குறித்த கல்வியமைச்சரின் சிபார்சு நேற்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. இன்னும் சிலநாட்களில் கல்வியமைச்சர் இச்சம்பள அதிகரிப்பு பற்றிய விபரங்களைத் தயாரிப்பார். அமைச்சர் நடத்தவுள்ள செய்தி நிருபர்கள் மகாநாட்டில் இதுபற்றி அறிவிக்கப்படவுள்ளது.

## மிகிந்தலை எம. பி. றிமான்டில்

(கொழும்பு)

மிகிந்தலை எம். பி. திரு. வலகம்ப கு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளாரென நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியதான குற்றச்சாட்டின் பேரில் இவர் உட்பட மேலும் சிலரும் சந்தேகத்தின்பேரில் கைதாகியுள்ளனர்.

## பெப்ரவரியில் பரீட்சை

திறந்த பல்கலைக்கழக 1983/84 ஆம் ஆண்டுக்கான மீள் பரீட்சைகளும் மற்றைய ஆண்டுகளுக்கான இறுதிப் பரீட்சையும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு யாழ். தொழில் நுட்ப வளாகத்தில் உள்ள திறந்த பல்கலைக்கழக வடபிராந்திய பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

## குருநகரில்...

—1ஆம் பக்கத் தொடர்

பணிப்பாளர் திரு எம், சிமியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

சென்ற மாதத்தைப் போலவே இம்மாதமும் ஒவ்வொரு பாடசாலைக்குமென தனியான ஒரு செக் வழங்கப்படும். ஆசிரியர்கள் தமது அதிபருடன் வங்கிக்குச்சென்று சம்பளத்தைப் பெறவேண்டும்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளின் சம்பளம் 19ம் திகதியும், வேலணை, புங்குடுதீவு. வட்டுக்கோட்டை, மானிப்பாய், சாவகச்சேரி வட்டாரங்களின் சம்பளம் 20ம் திகதியும் வழங்கப்படும். காங்கேசன்துறை வட்டார சம்பளம் காங்கேசன் துறை வங்கி மூலம் வழங்கப்படும்.

சகல அதிபர்களையும் கல்வித் திணைக்களத்துக்கு இன்று அல்லது நாளை நேரில் வந்து சம்பளப்பட்டியலையும், காசோலையையும் பெறுமாறும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

'ஈழமுரசு' சாயிபாபா அடவர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 17-1-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.